செ.வெ.எண்:56 நாள்:19.11.2026

மயிலாடுதுறை மாவட்டம்
பத்திரிக்கை செய்தி

மயிலாடுதுறை மாவட்டம் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 டிஜிட்டல் செயலிகளை கையாளுவதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்தை நகர்புற வாழ்வாதார மையத்தின் வாயிலாக வெளிசந்தை முறையில் மாதாந்திர மதிப்பூதியம் ரூ.25000/- க்கு தகுதியான நபரை தேர்வு செய்து நிரப்பிட உள்ளது. தகுதிகள்: கல்வி தகுதி பி.எஸ்.சி (கணினி அறிவியியல்), பி.சி.ஏ, இளநிலை பொறியியல் (கணினி), இளநிலை பொறியியல் (தொழில்நுட்பம்) தகுதி வாய்ந்த முன்அனுபவம் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்தினை மயிலாடுதுறை நகர்புற வாழ்வாதார மையம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்), 4 வது தளம், மாவட்ட ஆட்சியரகம், மயிலாடுதுறை என்ற முகவரிக்கு 24.11.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மயிலாடுதுறை.